செ.வெ.எண்.367 நாள் 01.05.2010

**செய்தி வெளியீடு – 1.5.2010**

## குமரி மாவட்டத்தில் இடி – மின்னல் தாக்கி இறந்தவர் மனைவிக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிவாரண உதவி!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், பொன்மனை கிராமத்தில் தனியாருக்குச் சொந்தமான ரப்பர் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது ஏற்பட்ட மழையில் இடி–மின்னல் தாக்கி தங்கராஜ் என்பவரின் மகன் ரசல்ராஜ் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்; தாம்சன் என்பவரின் மகன் சின்னநாடார் காயமடைந்து சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்.

இத்துயர சம்பவம் தொடர்பான விவரங்கள், குமரி மாவட்டம் திருவட்டாறு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி ஆர். லீமாரோஸ் மூலமாகத் தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்த முதலமைச்சர் கலைஞர் உயிரிழந்தவரின் குடும்பத்திற்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். அத்துடன், இத்துயர சம்பவத்தில் உயிரிழந்த ரசல்ராஜ் என்பவரின் மனைவி திருமதி புஷ்புலதா என்பவருக்கு இயற்கை இடர்ப்பாடு நிவாரண நிதியாக ஒரு இலட்சம் ரூபாயும், காயமடைந்த திரு. சின்னநாடாருக்கு 2500 ரூபாயும் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9